மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கிண்டி பொறியியல் கல்லூரியில் தொழில் நுட்பக் கல்வியை விரிவுபடுத்த சோவியத் வல்லுநர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும், ஆசிரியர்களை பயிற்சிக்காக சோவியத் யூனியனுக்கு அனுப்பவும், முதுகலைப் படிப்பு மற்றும் பிஎச்.டி. கல்வித் துறையில் ஆராய்ச்சி வசதிகளை நிறுவ அந்நாட்டிலிருந்து வேண்டிய தளவாடங்களை இறக்குமதி செய்யவும், சோவியத் யூனியன் உதவி கோரி, மத்திய அரசுக்கு இவ்வரசு கடிதம் எழுதியுள்ளது. இதுவரை ஏதும் உதவி கிடைக்கவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Every year hundreds of students are coming out of polytechnics. May I know from the Hon. Minister whether any arrangement has been made to provide them with appointments?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அப்படிப்பட்ட நிலைமை இல்லை. படித்துத் தேறி வருகிறவர்களுக்குப் போதுமான வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அதற்காக சில இடங்களில் சாண்ட்விச் கோர்ஸ் என்றும், பிறகு அப்ரென்டிஸ்ஷிப் என்றும் இருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை இப்பொழுது இல்லை. இப்பொழுது ஓரளவு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

Building for Nagercoil Municipal Council

* 88 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to put up new construction to house the Nagercoil Municipal Council; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

வந்தவாசி வட்டாரத்தில் தீவிர வேலைவாய்ப்புத் திட்டம்.

* 89 வினா.—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி ஒன்றியத்திற்கு தீவிர வேலைத் திட்டத்தில் (cresh Programme) 1971-72 ஆண்டுக்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது?